# கொல்கத்தா-பிரகடனம்-2024
# அறிவியல் இயக்கத் தீர்மானங்கள்

## பகுதி-1

# இன்றைய இந்தியாவை பண்டைய காலம் முதல் புரிந்து கொள்ளுதல்

# 1. பல்வேறு மதங்கள்

- பல்வேறு மதங்கள் இந்தியாவில் இருந்து வருகின்றன. இருப்பினும் பன்னெடுங்காலமாக மத மோதல்கள் இல்லாமல் இருந்து வந்துள்ளன.
- நம்பிக்கை சார்ந்த பாரம்பரியம் இருந்தாலும் நவீன மாற்றங்களையும் உள் வாங்கிக் கொள்கிறது

## 2. வேற்றுமையில் ஒற்றுமை

- பல்வேறு பாரம்பரியங்கள் மட்டுமல்லாமல் பிரபஞ்ச உண்மைகளை தேடுபவர்களாகவும் உள்ளனர்
- வேற்றுமையில் ஒற்றுமை என்ற அடிப்படையில் உணவு, உடை, மொழி உள்ளிட்ட பன்முகப் பண்பாடுகள் உள்ளன.

# 3. பன்முக சித்தாந்தங்கள்

- பண்டைய காலத்தில் இருந்தே ஆத்திகம், நாத்திகம், கருத்து முதல்வாதம், பொருள்முதல் வாதம், சமத்துவம் என்ற புத்தரின் கோட்பாடுகள் உட்பட மாறுபட்ட சித்தாந்தங்கள் வருகின்றன.
- மத சீர்திருத்த வாதிகளான பசவண்ணா, கபீர், குருநானக், வள்ளலார் சமூக சீர்திருத்தவாதிகளாக பெரியார் ஆகியோரும் இருந்துள்ளனர். சூஃபி, பக்தி இயக்கங்களும் நடந்துள்ளன.

# 4.அரசமைப்புச் சட்டம்

- அரசமைப்புச் சட்டம் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்.
- தங்களது உரிமைகளையும் அரசின் செய்ய வேண்டிய கடமைகளையும் தெரிந்து வைத்துள்ளனர்.
- பொருளாதார, சூழல், சமூகம் ஆகியவற்றிற்கான நீதி ஆகியனவற்றைப் புரிந்து வைத்துள்ளனர்.

# 5. பிரிவினைவாதத்திற்கு எதிராக

- வரலாற்று ரீதியான அறிவும், பன்முகச் செயல்பாடுகளும் கொண்டிருக்கின்றனர்
- சமூக அரசியல் பொருளாதார சுதந்திரத்திற்கு எதிரான பிரிவினைவாதிகளுக்கு எதிராக மக்கள் இருப்பதை அங்கீகரிக்கிறோம்

# 6.தொடரும் அறிவு

- நவீன அறிவியல் தொழில் நுட்ப கண்டுபிடிப்பாளர்களான ஜே.சி.போஸ் விஸ்வேஸ்வரய்யா, பி.சி.ராய், சிவி ராமன், மேக்நாட் சாஹா,மஹலனோபிஸ் ஆகியோரின் பங்களிப்பில் அறிவியல் கொள்கை..
- காந்தி,நேரு,இடதுசாரிகள் ஆகியோரின் கருத்துக்களை உள்வாங்கிய தற்சார்பு கொள்கை
- அறிவியல் மனப்பான்மைக்கான சட்டம், தேசிய கலைத் திட்டம்-2005, கல்வி உரிமைச் சட்டம்-2005 ஆகியன இவற்றின் தொடர்ச்சியே..

# 7.பாரம்பரியமும் நவீனமயமும்

- உலகளாவிய நவீன அறிவியல் தொழில் நுட்பத்தின் வேர்கள் பண்டைய, மத்திய காலம் உட்பட காலங்காலமாக இங்கும் உள்ளன.
- இதைப் புறக்கணித்துப் பண்டைய புராணங்களை வரலாறாகவும் கட்டுக்கதைகளை அறிவியலாகவும் ஒப்பிட்டுப் பேசுவது என்பது பண்டைய காலத்திய சமத்துவமற்ற சமூகத்தை உருவாக்கும் தன்மையுடையது என புரிந்து வைத்துள்ளனர்.

# 8.பண்டைய / நவீன தாக்குதல்கள்

- பண்டைய /மத்திய காலத்திய பிராமணியத் தாக்குதலை எதிர்த்த நிலையை நாம் அங்கீகரிக்க வேண்டும்.
- அறிவியல் கண்ணோட்டமற்ற சிந்தனைகளை மக்களிடம் பரப்புதல், அறிவியல் மனப்பான்மைக்கு எதிரான தாக்குதல்கள், கல்வி, ஆராய்ச்சி நிறுவனங்களின் மீது தாக்குதல் ஆகியனவற்றை நாம் இது போன்று எதிர்த்தாக வேண்டும்.

# 9. மீண்டும் வரும் பண்டைய கல்வி முறை

- அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான வகையில் உருவாக்கப்பட்டுள்ள தேசிய கல்விக் கொள்கை பண்டைய கல்வி முறையை புனரமைக்கிறது என புரிந்து கொண்டுள்ளனர்.
- மதச் சார்பற்ற, ஜனநாயக கோட்பாடுகளை இது சிதைக்கிறது என்பதை மக்கள் அறிந்திருக்கிறார்கள்.
- வெறுப்பு, சொல்வதை ஏற்றுக் கொள்ளுதல் போன்ற இந்துத்வா கோட்பாடுகளை இது உள்ளடக்கியுள்ளது என அனைவரும் உணர்ந்திருக்கின்றனர்.

# கொல்கத்தா-பிரகடனம்-2024
# அறிவியல் இயக்கத் தீர்மானங்கள்

## பகுதி-2

## நமது செயல் திட்டத்திற்கான
## தீர்மானங்கள்

# தீர்மானம்-1

- கொல்கத்தா பிரகடனம்-2024 ஐ கல்வி, ஆய்வு நிறுவனங்களில் பிரபலப்படுத்துவது.
- அரசமைப்புச் சட்டம் 51 ஏ (எச்) சட்டப் பிரிவைப் பாதுகாத்தல் என உறுதி மொழி எடுத்தல்.
- கல்வி,அறிவியல், தொழில்நுட்பம், பல்துறை படிப்புக்ளுக்கு முதலீடு அதிகரித்தல் மூலம்
  - அறிவியல் மனப்பான்மை, அறிவியல் கண்ணோட்டம் வளர்த்தல்
  - மொழி,சமூக பண்பாட்டு பன்முகத்தை வளர்த்தல்
  - உலகளாவிய நட்புக்கும் மதச்சார்பற்ற, சமதர்ம சமுதாய சித்தாந்தம் மூலம ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்

# தீர்மானம்-2

- பொருளாதார, சூழல் நீதிகளுக்குப் போராடும் அமைப்புகளுக்கு உதவுதல்
- கல்வி, ஆராய்ச்சி மூலம் ஒரு தரமிகு வாழ்க்கை அமையப் பாடுபடுதல்
- சமூகப் பொருளாதாரக் கொள்கை உருவாக்குவதில், அமுலாக்குவதில் அறிவியல், தொழில் நுட்ப நிறுவனங்கள் பங்கு பெறுவதை நாம் இரு மடங்கு உறுதி செய்தல்

# தீர்மானம்-3

- சாவித்ரிபாய் பூலே,பகத் சிங், அம்பேத்கார், காந்தி, நேரு, நம்பூதிரிபாட், பெரியார் தாஹூர், சுபாஷ் போஸ்,மேக்னாட் சாஹா, ஹோமி பாபா,பட்னகர், ஷாஹீர் உசேன் போன்றோரின் பணிகளை நாம் தொடர்ந்து இந்தியச் சிந்தனையை வலுப்படுத்தி விடுதலைப் போராட்டத்தின் முற்போக்கு சிந்தனைகளை எடுத்துச் செல்லுதல்

# தீர்மானம்-4

- கல்விபுலச் சுதந்திரம், சிவில் உரிமைகள், ஜனநாயக உரிமைகள், பேச்சுரிமை போன்றவற்றிற்காக அரசமைப்புச் சட்டப்படி பாடுபடும் இயக்கங்களுக்கு அறிவியல் சமூகத்தின் ஒத்துழைப்பைத் திரட்டுதல்
- தலை விதிக் கோட்பாடு மூட நம்பிக்கைகளைப் பரப்பும் போலிச் சாமியார்கள்/ கடவுள் மனிதர்களை அம்பலப்படுத்துதல்

# தீர்மானம்-5

- கல்வியாளார்கள், ஆய்வாளர்கள், விஞ்ஞானிகள், தொழில் நுட்பவியலாளர்கள், சமூக விஞ்ஞானிகள்,தொழில்சார் நிபுணர்கள்,அனைத்து வகை ஆசிரியர்கள், ஆகியோரைத் திரட்டி சமூக வளர்ச்சி, திட்டங்கள் தீட்டுவதில் பங்கேற்க வைத்தல்.
- அறிவியல் மனப்பான்மை வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள சவாலைச் சந்திக்க உரிய நிறுவனங்களை கட்டமைத்தல்.